සමෘද්ධි සංවර්ධන
දෙපාර්තමේන්තුව
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்
Department of Samurdhi Development

සමාජ සවිබලගැන්වීම් හා සුබසාධන අමාත්‍යාංශය
சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சு
MINISTRY OF SOCIAL EMPOWERMENT AND WELFARE

| | | |
|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல SDD/HO/CBO/9/சுற்றறிக்கை/02<br>My No | ඔබේ අංකය<br>உமது இல ..........................................<br>Your No | දිනය<br>திகதி 2017.05.15<br>Date |

சமுர்த்தி சுற்றறிக்கை :- சமுதாய அடிப்படை /02/2017/02

சகல மாவட்ட செயலாளர் / மாவட்ட சமுர்த்தி மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதிகள்
சகல மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர்கள்,
சகல பிரதேச செயலாளர்கள்,
சகல ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்கள்,
சகல சமுர்த்தி முகாமையாளர்,
சகல சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்
சகல சமுர்த்தி பிரதேச அமைப்புக்களின் தலைவர்களும் செயலாளர்களும்
சகல சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புக்களின் தலைவர்களும் செயலாளர்களும்

**சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழ் சமுதாய அடிப்படை அமைப்புக்களையும் பிரதேச அமைப்புக்களையும் பதிவு செய்தல்**

**01. அறிமுகம்**

2013ம் ஆண்டின் 01ம் இலக்க சமுர்த்தி சட்டத்தின் 42 வது பிரிவிற்கமைய அமைக்கப்பட்ட 2008/09 என்ற இலக்கத்தினையுடைய சமுர்த்தி கட்டளைகள் 2007.03.07ம் திகதியிடப்பட்ட இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

அச் சட்டத்தின் 09 வது பிரிவு மற்றும் 15 வது பிரிவுகளுக்கமைய முறையே சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பு மற்றும் சமுர்த்தி பிரதேச அமைப்புக்களை தாபிக்கும் பொருட்டு மேற்சொன்ன வர்த்தமானியில் இலக்கம் 4(2) மற்றும் 4(3) பந்திகளுக்கமைய செயற்படும் பொருட்டான அறிவுரைகள் இச்சுற்றறிக்கை மூலம் வழங்கப்படுகின்றது.

குறிப்பு :-

2013ம் ஆண்டின் 01ம் இலக்க சமுர்த்தி சட்டம் மற்றும் 2017 மார்ச் 07ம் திகதியிடப்பட்ட 2009/08 என்ற இலக்கத்தினையுடைய அதி விசேட வர்த்தமானியில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு இச்சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கமைய நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

1වන අදියර,4 වන මහල, සෙත්සිරිපාය, බත්තරමුල්ල. /1ம் கட்டம், 4 வது மாடி,செத்சிறிபாய பத்தரமுல்ல /1st Step, 4th floor, Sethsiripaya ,Battaramulla

| | අධ්‍යක්ෂ ජනරාල්<br>பணிப்பாளர் தலைமையதிபதி<br>Director General | අධ්‍යක්ෂ (මානව සම්පත්)<br>பணிப்பாளர் ( மனிதவளம்)<br>Director (Human Resource) | ප්‍රධාන ගණකාධිකාරී<br>பிரதான கணக்காளர்<br>Chief Accountant | අධ්‍යක්ෂ (ක්ෂුද්‍ර මූල්‍ය)<br>பணிப்பாளர் (குறு நிதி )<br>Director ( Micro Finance) | කාර්යාලය<br>அலுவலகம்<br>Office |
|---|---|---|---|---|---|
| Tel- | 011-2873802/2872202 | 011-2873799 | 011-2869742 | 011-2889003 | 011-2887280 |
| Fax - | 011-2889002 | 011-2873996 | 011-2869742 | 011-2887469 | Hot Line: 011- 2887722 |
| E-mail- | dg@divineguma.gov.lk | diradmin@divineguma.gov.lk | finance@divineguma.gov.lk | Hot Line:0112-885582 | |
| | | Hot Line : 0112-889007 | | | |

02. சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் பொருட்டு சான்றிதழ் ஒன்றினை வழங்குதல்

I. அமைப்பு விதி மற்றும் நிர்வாகாக் கட்டமைப்பின் பிரதி ஒன்றினை ஒப்படைத்தல்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2009/08 என்ற இலக்கமும் 2017 மார்ச் 07ம் திகதியிடப்பட்டதுமான அதிவிசேட வர்த்தமானியில் 4(2) பந்திக்கமைய ஒவ்வொரு சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பினாலும் மேற்சொன்ன வர்த்தமானியின் 04(1) (அ) இற்கேற்ப தயாரிக்கப்பட்ட அமைப்பு விதி மற்றும் நிர்வாகக் கட்டமைப்பினை கீழ் குறிப்பிடப்படும் ஆவணங்களுடன் 2017 ஜுன் மாதம் 07ம் திகதிக்கு முன்னர் சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் செயலாளரால் சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமையதிபதியின் பொருட்டு மேற்சொன்ன சமுர்த்தி அடிப்படை அமைப்பு சொந்தமான அதிகாரப் பிரதேசத்தின் பிரதேச செயலாளருக்கு ஒப்படைத்தல் வேண்டும்.

(அ) பணிப்பாளர் தலைமைதிபதியிடமிருந்து (பதிவிலக்கம்) சான்றிதழ் ஒன்றினைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டான இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவம் (இணைப்பு 02)

(ஆ) சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் தலைவர் மற்றும் செயலாளரால் அங்கீகரிக்கப்பட்ட முதலாவது பொதுச் சபைக் கூட்ட அறிக்கையின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி ஒன்று (2017 எப்ரல் அல்லது மே மாத பொதுச் சபைக் கூட்டம் நடைபெற்றதன் பின்னர்)

(இ) சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் நிறைவேற்றுக்குழுவின் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு விருப்பத்தினை தெரிவித்து மேற்சொன்ன நிறைவேற்றுக் குழுவிற்கு தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர்களின் பெயர், முகவரி மற்றும் கையொப்பம் உள்ளடங்கிய பெயர்ப்பட்டியல் (இணைப்பு 01)

(ஈ) முதலாவது பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்து கொண்ட பழைய அங்கத்தவர்களின் பெயர்ப்பட்டியல் மற்றும் புதிய அங்கத்தவத்தினைப் பெற்றுக் கொள்ள உத்தேசித்துள்ளவர்களின் பெயர்ப்பட்டியல்.

(உ) சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் பெயரில் சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கியில் அங்கத்தவரல்லாதோர் சேமிப்புக் கணக்கு ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக (பாஸ் புத்தகத்தின் பிரதியொன்றுடன்) குறித்த வங்கியின் முகாமையாளரிடமிருந்து பெற்றுக் கொண்ட உறுதிப்பாட்டுக் கடிதம் (இணைப்பு 03)

(ஊ) சமுர்த்தி பிரதேச அமைப்பின் பெயரில் சேமிப்புக் கணக்கினைப் பராமரித்துச் செல்லும் சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சங்கத்தில் "சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பு மற்றும் பிரதேச அமைப்பினை பதிவு செய்யும் கட்டணம்" என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்ட சேகரிப்பு பேரேட்டுக் கணக்கொன்றில் வரவின் பொருட்டு ரூபா 500/= இற்கான பதிவுக் கட்டணத்தைச் செலுத்தி அப் பதிவுக் கட்டணம் செலத்தப்பட்டதனை உறுதிப்படுத்தும் முகாமையாளர் வழங்கிய உறுதிப்பாட்டுக் கடிதம் (இணைப்பு 04)

## II. அமைப்பு விதியினதும் நிருவாகக் கட்டமைப்பினதும் பிரதி ஒன்றினைப் பொறுப்பேற்றல்.

(அ) மேலே 2(1) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் உரிய ஆவணங்கள் சகலதையம் பொறுப்பேற்பது பிரதேச செயலாளரின் பொருட்டு தலைமையக சமுர்த்தி முகாமையாளர் அல்லது அவரின் கீழுள்ள சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவரால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(ஆ) இரு பிரதிகளைக் கொண்டதாக பொறுப்பேற்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தினதும் அமைப்பு விதியினதும் ஒரு பிரதியில் சகல பக்கங்களிலும் தலைமையக சமுர்த்தி முகாமையாளர்களின் உத்தியோகபூர்வ இலச்சினையைப் பொறித்து கையொப்பமிட்டு சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் செயலாளருக்கு திருப்பி ஒப்படைத்தல் வேண்டும்.

(இ) குறித்த ஆவணங்கள் சகலதும் பிழையின்றி பரீட்சித்து பொறுப்பேற்றதை உறுதிப்படுத்தும் கடிதம் ஒன்றினை தலைமையக சமுர்த்தி முகாமையாளரால் சமுதாய அடிப்படை அமைப்பின் செயலாளருக்கு வழங்குதல் வேண்டும். (இணைப்பு 05)

(ஈ) ஒவ்வொரு சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புக்கும் நிலையான ஆவணக் கோவை ஒன்றினை சகல தலைமையக சமுர்த்தி அலுவலகங்களிலும் பராமரித்துச் செல்ல வேண்டியதுடன் பதிவின் பொருட்டு பொறுப்பேற்ற ஆவணங்களை அக் கோவையில் ஆவணப்படுத்தி பாதுகாப்பாக வைத்துக் கொள்ளல் வேண்டும்.

(உ) பதிவின் பொருட்டு பொறுப்பேற்ற சகல ஆவணங்களையும் அடிப்படையாகக் கொண்டு பதிவேடு ஒன்றினைத் தயாரித்துக் கொள்ளல் வேண்டும். (இணைப்பு 06)

## III. பணிப்பாளர் தலைமையதிபதியால் சான்றிதழ் ஒன்றினை வழங்குதல்.

(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2009/8 என்ற இலக்கமும் 2017 மார்ச் 07ம் திகதியிடப்பட்டதுமான அதி விசேட வர்த்தமானியின் 04 (03) பந்திக்கமைய ஒவ்வொரு சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பினதும் அமைப்பு விதி மற்றும் நிருவாகக் கட்டமைப்புக்குரிய ஆவணங்களைப் பொறுப்பேற்ற திகதியிலிருந்து 45 நாட்களுக்குள் அதாவது ஜூலை 22 ம் திகதிக்கு முன்னர் அந்த ஒவ்வொரு சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புக்கும் சான்றிதழ் ஒன்றினை பணிப்பாளர் தலைமையதிபதியின் பொருட்டு மேற்சொன்ன சமுர்த்தி சமுதாய அமைப்பு அமைந்துள்ள அதிகாரப் பிரதேசத்தின் பிரதேச செயலாளரால், சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் தலைவருக்கு வழங்குதல் வேண்டும். (எதிர்காலத்தில் அச்சிடப்பட்ட சான்றிதழ் கிடைக்க ஆவண செய்யப்படும்)

(ஆ) மேலே 2(III) (அ) இன் கீழ் வழங்கப்பட்ட சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியொன்றினை சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புக்குச் சொந்தமான நிலையான ஆவணக்கோவையில் ஆவணப்படுத்தி வைத்தல் வேண்டும்.

(இ) மேற்படி 2(III) (அ) இன் கீழ் வழங்கப்பட்ட சான்றிதழின் பிரதியினை பொறுப்பேற்றதாக உறுதிப்படுத்திய பிரதியிலும் பதிவேட்டிலும் சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் தலைவரால் கையொப்பமிடல் வேண்டும்.

### 3) சமுர்த்தி பிரதேச அமைப்பின் பொருட்டு சான்றிதழ் ஒன்றினை வழங்குதல்

#### I. அமைப்பு மற்றும் நிர்வாகக் கட்டமைப்பின் பிரதி ஒன்றினை ஒப்படைத்தல்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2009/8 என்ற இலக்கமும் 2017 மார்ச் 08ம் திகதியிடப்பட்டதுமான அதிவிசேட வர்த்தமானியில் 4(2) பந்திக்கமைய ஒவ்வொரு சமுர்த்தி பிரதேச அமைப்பினாலும் மேற்சொன்ன வர்த்தமானியில் 04(1) (ஆ) இற்கமைய தயாரிக்கப்பட்ட அமைப்பு விதி மற்றும் நிர்வாகக் கட்டமைப்பினை கீழ் குறிப்பிடப்படும் ஆவணங்களுடன் ஜுன் மாதம் 07ம் திகதிக்கு முன்னர் சமுர்த்தி பிரதேச அமைப்பின் செயலாளரால் குறித்த பிரதேசத்தின் தலைமையக சமுர்த்தி முகாமையாளருக்கு ஒப்படைக்கப் வேண்டியதுடன் இது கிடைத்தமையே அவரால் மேவுகைக் கடிதம் ஒன்றுடன் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமையதிபதியின் பொருட்டு சமுதாய அடிப்படை அமைப்பு பிரிவுப் பொறுப்பு பணிப்பாளருக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

(அ) பணிப்பாளர் தலைமையதிபதியிடமிருந்து சான்றிதழ் ஒன்றினை பெற்றுக் கொள்ளும் பொருட்டு இரு பிரதியில் தயாரிக்கப்பட்ட விணணப்பப்படிவம் (இணைப்பு 07)

(ஆ) சமுர்த்தி பிரதேச அமைப்பின் தலைவர் மற்றும் செயலாளரால் அங்கீகரிக்கப்பட்ட முதலாவது பொதுச் சபைக் கூட்டத்தின் அறிக்கையின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி ஒன்று (2017 ஏப்ரல் அல்லது மே மாத பொதுக் சபைக் கூட்டம் நடந்ததன் பின்னர்.)

(இ) சமுர்த்தி பிரதேச அமைப்பின் நிறைவேற்றுக் குழுவின் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு சம்மதத்தினைத் தெரிவித்து மேற்சொன்ன நிறைவேற்றுக் குழுவுக்கு தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர்களின் பெயர், முகவரி, மற்றும் கையொப்பம் உள்ளடங்கிய பெயர்ப்பட்டியல் (இணைப்பு 08)

(ஈ) முதலாவது பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்து கொண்ட அங்கத்தவர்களின் பெயர்ப்பட்டியல்.

(உ) சமுர்த்தி பிரதேச அமைப்பின் பெயரில் சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சங்கத்தில் சேமிப்புக் கணக்கொன்றை ஆரம்பித்ததாக (பாஸ் புத்தகத்தின் பிரதியுடன்) குறித்த வங்கிச் சங்கத்தின் முகாமையாளரிடமிருந்து பெற்றுக் கொண்ட உறுதிப்பாட்டுக் கடிதம் (இணைப்பு 09)

(ஊ) சமுர்த்தி பிரதேச அமைப்பின் பெயரில் சேமிப்புக் கணக்கு ஒன்றினை பராமரித்துக் செல்லும் சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சங்கத்தில் “சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பு மற்றும் பிரதேச அமைப்பினை பதிவு செய்யும் கட்டணம்” என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்ட சேகரிப்பு பொதுப் பேரேட்டுக் கணக்கு ஒன்றில் வரவிடும் பொருட்டு ரூபா 500/= இதற்கான பதிவு செய்யும் கட்டணத்தினைச் செலுத்தி அப்பதிவுக்கட்டணம் செலுத்தப்பட்டதனை வங்கிச் சங்கத்தின் முகாமையாளரிடமிருந்து பெற்றுக் கொண்ட உறுதிப்பாட்டுக் கடிதம் (இணைப்பு 10)

மேலதிகப் பணிப்பாளர் தலைமையதிபதியின் பொருட்டு மாவட்ட சமுர்த்தி பணிப்பாளருக்கு அனுப்புதல் வேண்டும்.

**விளக்கம் பெறல்:-**

இச்சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் ஏதாவது விளக்கங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டியேற்படின் தாமதிக்காது சமுதாய அடிப்படை அமைப்பு பிரிவுப் பொறுப்பு பிரதிப் பணிப்பாளரை தொடர்பு கொள்ளவும் (தொலைபேசி இலக்கம் 011-2873794)

நீல் பண்டார ஹப்புஹின்ன.
பணிப்பாளர் தலைமையதிபதி,
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்.

**பிரதிகள்:-**

1. சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை கௌரவ அமைச்சர் திரு எஸ்.பி. திஸாசாயக்க -த.கூ.க.பொருட்டு.
2. சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை கௌரவ பிரதி அமைச்சர் திரு ரஞ்சன் ராமநாயக்க -த.கூ.க.பொருட்டு
3. செயலாளர், சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சு -த.கூ.க.பொருட்டு
4. மேலதிக செயலாளர், (அபிருத்தி), சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சு -த.கூ.க.பொருட்டு
5. மேலதிக செயலாளர், (நிருவாகம்), சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சு -த.கூ.க.பொருட்டு
6. பிரதம கணக்காளர், சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் -த.கூ.க.பொருட்டு
7. பிரதான உள்ளகக் கணக்காய்வாளர், சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் -த.கூ.க.பொருட்டு
8. சகல பணிப்பாளர்களும், சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் -த.கூ.க.பொருட்டு

Translated By: M.M.M. Jawhar (Translator)